# விற்பனை நிலையங்களுக்கு பின்னால்:

## இந்தியாவின் ஆடைத் தொழிலாளர்கள்களின் மறைக்கப்பட்ட உண்மைகள்

பிரகடனம்:-1 எல்லோரும் சுதந்திரமாகவும், சமத்துவத்துடனும், கௌரமாக உரிமையுடன் வாழப்பிறந்தவர்கள். சகோதரத்துவத்தோடு ஒருவர் மற்றவரை மதித்திட வேண்டும. 2. நிறம், மொழி, இனம், ஜாதி, பாலினம், அரசியல், கணிப்பு, நாடு, சமூகம், சொத்து மற்றும் பதவி போன்றவற்றிற்கு அப்பாற்பட்டு ஒவ்வொருவரும் உரிமைகளையும், சுதந்திரங்களையும் பாகுபாடின்றி அனுபவிக்க உரிமையுண்டு. மேலும் அரசியல் சட்டம் அல்லது உலகளாவிய நாட்டின் நிலை அல்லது வாழும் நாடு போன்றவற்றை அடிப்படையாக கொண்டு பாகுபடுத்தக் கூடாது. 3. அனைவரும் வாழ்வதற்கும், சுதந்திரமாக பாதுகாப்புடன் இருப்பதற்கும் உரிமையுண்டு. 4. எவரும் அடிமையாக அல்லது அடிமைத்தனமாக நடத்தப்படக் கூடாது். அடிமைத்தனம் மற்றும் அடிமை வர்த்தகம் எல்லா வடிவங்களிலும தடை செய்யப்பட வேண்டும். 5. எவரும் கொடுமைக்கும் மற்றும் சித்திரவதைகளுக்கும் ஆட்படுத்தக் கூடாது.



# விற்பனை நிலையங்களுக்குப்பின்னால்

## இந்தியாவின் ஆடைத் தொழிலாளர்களின் மறைக்கப்பட்ட உண்மைகள்

# சுருக்க அறிக்கை

**ஏப்ரல் 2014**

**முன்னட்டைப் புகைப்படம்: தமிழ் நாட்டிலுள்ள ஒரு ஆடைத்தொழிற்சாலையின் தொழிலாளர்கள்(FIDH)**

## செயல் சுருக்கம்

சுமங்கலித்திட்டம் மற்றும் கொத்தடிமைத் தொழிலின் இதர வடிவங்களின் நிலைகள் உட்பட ஆடைத்தொழிலாளர்களின் வேலை நிலைகள் மற்றும் மனித உரிமைச் சூழல்கள் குறித்து ஆய்வு செய்ய மனித உரிமைகளுக்கான சர்வதேச சம்மேளனம் (FIDH) சூலை 2013-ம் ஆண்டு ஒரு உண்மையறியும் பணியை மேற்கொண்டது. இக்குழுவின் பிரதிநிதிகள் உலகளவிலான வர்த்தக பெயரைத் தாங்கி செயல்படும் ஒரு காலணி தொழிற்சாலையையும், நான்கு ஆயத்த ஆடைத் தொழிற்சாலைகளையும், சில்லரை விற்பனை மையங்களையும், தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம் மற்றும் ஹரியான மாநிலங்களிலுள்ள மூன்று தங்குமிட விடுதிகளையும் ஆய்வுக்காக பார்வையிட்டனர். உள்ளூர் தொழிற்சங்கங்கள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் வல்லுநர்களிடம் மேற்கொண்ட நேர்காணல்கள் இவ்வறிக்கையின் பகுப்பாய்வை செழுமைப்படுத்தின.

இந்ததிய ஆடைத்தொழில் துறையின் மனித உரிமை மீறல்களை புரிந்துகொள்ள பொருளாதார மற்றும் கலாச்சார பாகுபாடுகளுக்கு வித்திட்ட துரிதப்படுத்தப்பட்ட தாராளமயமாக்கல் மற்றும் 25 வருட துரித பொருளாதார வளர்ச்சி மற்றும் அதன் விளைவான சட்ட அமலாக்கமின்மை, மோசமான வேலை நிலைமை மற்றும் அதிகரிக்கும் மனித உரிமை மீறல்களின் பின்னணியில்தான் புரிந்துகொள்ள வேண்டும்.

## முக்கிய வெளிப்பாடுகள் / கண்டறிதல்கள்

உள்ளூர் தொழிற்சங்கங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் வல்லுனர்களுடனான நேர்காணலிருந்து ஆலைத் தொழிற்சாலைகளின் வேலைத்தளங்கள் மற்றும் தங்குமிட விடுதிகளில் மனித உரிமை மீறல்கள் இருப்பதை FIDH அடையாளங்கண்டது. கடின வேலைகள் மற்றும் மோசமான வேலை நிலைமை, போதிய சுகாதார வசதி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கையின்மை போன்ற நிலை மிகச் சாதாரணமாக நீடிக்கின்றன. முறையற்ற விகிதத்தில் பயன்படுத்தப்படும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் மற்றும் தொழில் பயில்வோர், மறுக்கப்படும் பணியாளர் சட்ட பாதுகாப்பு மற்றும் நலன்கள், கட்டாயமாக்கப்பட்ட கூடுதல் நேர வேலை, குறைந்தபட்ச கூலி மறுப்பு போன்ற பிரச்சனைகள் அதிக அளவில் ஆடைத் தொழிற்சாலைகளில் காணப்படுகின்றன. நடமாடும் சுதந்திரம் உட்பட்ட ஆடைத் தொழிலாளர்களின் சுதந்திரம் தொழிற்சாலையிலும் தங்கும் விடுதியிலும் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதை கண்டறிந்தனர். சந்தித்த ஒவ்வொரு தொழிற்சாலையிலும் "மருத்துவர் அறைகள்" மற்றும் "கழிவறைகள்" போன்ற வசதிகள் வெறுமையாகக் காட்சியளித்தது உயர் உற்பத்தி திறனை உருவாக்கும் ஒரு கடின அழுத்த சூழ்நிலையை வெளிப்படுத்தியது.

பாலின பாகுபாடு ஆடைத்தொழிற்சாலையில் வேரூன்றி இருப்பதையும் வேலைக்கு ஆள் சேர்க்கும் தருணத்தில் திருமணமான பெண்களுக்கெதிராக பாலின பாகுபாடு குறிப்பிடும் விதத்தில் தெளிவாகவே வெளிப்படுகிறது என்பதையும் குழுவினர் கண்டுள்ளனர். தொழிற்சாலைகள் மற்றும் விடுதிகளில் பாலியல் ரீதியான தொல்லைக்கு உட்படுத்தப்படுதல் உட்பட அவமானப்படுத்துதல், உடல் ரீதியான துன்புறுத்தல்கள், கடின வார்த்தைகளால் மனம் புண்படவைத்தல் என்பன அன்றாடம் நடைபெறுகின்ற கொடுமைகள் என உள்ளூர் அரசு சாரா நிறுவனங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இடம் பெயர் தொழிலாளர்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட சாதியினர் குறிப்பாக தலித்துகள் பாகுபாட்டு முறைக்கு உள்ளாக்கப்படும் சூழல் இருந்தது.

இளம் பணியாளர்களை வேலைக்கு அமர்த்தும் சட்டத்தேவைகளை முதலாளிகள் அடிக்கடி மீறுகின்றனர். வயது நிர்ணய சான்றிதழ் போன்ற ஆவணமின்மை காரணமாக குழந்தை தொழிலாளர் குறித்த சட்டத்தடைகளை நம்பகத்தகுந்த வகையில் அமல்படுத்துவது மிகவும் கடினமாகவே உள்ளது. சுமங்கலி திட்ட நடைமுறை (கொத்தடிமை முறையை ஏற்படுத்தும் அம்சங்களை உள்ளடக்கிய ஒரு வேலை வாய்ப்புத்திட்டம்) குறிப்பாக நூற்பாலைகளில் நீடிக்கின்றன. இதற்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட பல்தரப்பு முயற்சிகள் உறுதியான முன்னேற்றத்தை ஏற்படுத்தவில்லை, மற்றும் சுமங்கலி திட்டத்தை ஒடுக்கவும் தவறிவிட்டது.

ஏறக்குறைய தொழிற்சங்கங்களின்மை ஆடைத் தொழிற்சாலைகளின் பரிகார அமைப்புகள் செயல்படாமை மற்றும் தொழிற்சங்கங்கள் ஏற்படுத்துவதற்கான நடை முறை சிக்கல்கள் போன்றவை கூட்டுபேர உரிமை உட்பட ஒருங்கிணையும் உரிமை மற்றும் ஒன்று சேர்வதற்கான உரிமை போன்ற உரிமை மீறல்களே.

## <u>இந்திய உற்பத்தியாளர்களின் பங்கு மற்றும் பொறுப்புகள்</u>

தணிக்கையாளர்கள், அரசுசாரா நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் முன்னறிவிப்பில்லா திடீர் சந்திப்புகளை நேரிட ஆடைத்தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் மேலாளர்கள் மிகவும் பழக்கப்பட்டும் நன்கு தயாராகவும் உள்ளனர். வெளியிலிருந்து வருபவர்கள் நுழைந்ததும் தொழிற்சாலைகளின் தொழில் நிலைமைகளில் ஒரு சிறந்த தோற்றத்தை உருவகப்படுத்தவும் மற்றும் வெளிநாட்டு நுகர்வோரின் “சமூகத் தேவைகளை” ப் பிரதிபலிப்பவர்களாகவும் காட்டிக் கொள்ளவும் ஒரு செயற்கைத்தனமான போலியான பிரதிபலிப்புகளை தயாராக வைத்து காண்பிக்கின்றனர். FIDH பிரதிநிதிகள் சந்திப்பின்போது தொழிற்சாலை மேலாளர்கள் மற்றும் விடுதிப் பாதுகாவலர்கள் நேர்காணப்பட்ட தொழிலாளர்களின் பதில்களை திருத்தினர் அல்லது

நெறிப்படுத்தினர் மற்றும் அது சுய தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டதாக இருந்தது. தொழிற்சாலை உரிமையாளர்களும் மற்றும் மேலாளர்களும் தெளிவற்ற முரண்பாடான பதில்களை வழங்கியதுடன், குழுப் பிரதிநிதிகளால் மீண்டும் சரிபார்க்க இயலாத ஆவணங்களை வழங்கினர்.

தொழிற்சாலையின் உண்மையான வேலை நிலையை மறைக்கும் வகையில் வயதுச்சான்றிதழ் போன்ற ஆவணங்களைத் திரித்துக் காண்பிப்பதுடன் தொழிலாளர்களின் குறைகளைத் தெரிவிக்காவண்ணம் இறுக்கமான கண்காணிப்புடன் தடுக்கின்றனர் என்று உள்ளூர் தொழிற்சங்கங்களும் அரசு சாரா நிறுவனங்களும் கூறுகின்றனர். ஆடைத்தொழிற்சாலை உரிமையாளர்களும் மேலாளர்களும் சமூகக் கண்காணிப்பை வேண்டுமென்றே தடுக்கின்றனர். பலமற்ற அரசு தொழிலாளர் நலத்துறை ஆய்வு மற்றும் தொழிற்சாலைகளில் தொழிற்சங்கங்கள் இல்லாமை போன்ற பலவீனங்களால் இந்திய ஆடைதொழிற்சாலைகள் மனித உரிமை மீறல்கள் ஏற்படும் தளங்களாக அமைகின்றன.

ஆடைத்தொழிற்சாலைகளில் தொழிற்சங்கங்கள் உருவாவதை அனுமதிக்கத் தயங்கும் உரிமையாளர்கள் மற்றும் மேலாளர்களால் தொழிலாளர்களின் கூட்டுபேர உரிமை உட்பட ஒருங்கிணையும் மற்றும் ஒன்று சேரும் உரிமை போன்ற தொழிலாளர் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. தொழிற்சங்கங்கள் தேவையில்லை, இப்போதுள்ள தொழிலாளர் குழுக்கள் இதற்கு மாற்றானது மற்றும் போதுமானது என்று மேலாளர்கள் கூறுகின்றனர். ஆனாலும் இத்தொழிலாளர் குழுக்கள் சனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதோ அல்லது தொழிலாளர்களின் குறைகளை நேர்மையான முறையில் கையாண்டு பரிகாரம் வழங்கும் அதிகாரம் படைத்ததாகவோ இல்லை.

வர்த்தகம் மற்றும் மனித உரிமைகள் குறித்த 'ஐக்கிய அரபு நாடுகளின் வழிகாட்டல் கோட்பாடுகள்' போன்ற பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச கொள்கைகள் மனித உரிமைகளை மதிப்பதற்கான பொறுப்பு ஆடைத் ரொழிற்சாலைகள் மற்றும் நூற்பாலைகளுக்கு உண்டு எனத் தெரிவிக்கின்றது. இந்திய உற்பத்தியாளர்கள் தங்களது ஊழியர்களின் உரிமைகளை மதிக்க வேண்டும் என்பதோடு அவர்கள் நூற்பாலைகளில் மனித உரிமைகள் மீறல்கள் நடைபெறாவண்ணம் தங்களது விநியோகஸ்தர்கள் மீது செல்வாக்கு செலுத்தி தடுக்கவேண்டும்

## <u>உலக வர்த்தக வணிகச்சின்னங்களின் பங்கும் பொறுப்புகளும்</u>

இந்த அறிக்கை உலக வர்த்தக வணிகச்சின்னங்களின் 'நன்னடத்தை விதிகளின்' எல்லைகளையும் மற்றும் அந்த விதிகள் பின்பற்றப்படுவதை

கண்காணிப்பதற்கு நியமிக்கப்பட்ட சமூக ஆய்வு முறைகளையும் சுட்டிக்காட்டுகின்றது. இவை சிக்கலான மனித உரிமை மீறல்களை மதிப்பிடுவதற்கும் மற்றும் தடுப்பதற்கும் பொருத்தமானவையல்ல. உலக வணிகச்சின்னங்களின் சமூக பொறுப்புகளுக்கும் தொழிற்சாலைகளிலுள்ள ஆடைத் தொழிலாளர்களின் உண்மையான நிலைகளுக்குமிடையே தெளிவான பொருத்தமின்மைகள் உள்ளன. சமூக கடமை கொள்கைகளும் அமைப்பு முறைகளும் முதலடுக்கு விநியோகஸ்தர்களுக்கு மட்டுமே உள்ளது நூற்பாலைகள் போன்ற இரண்டாம் மற்றும் மூன்றாம் அடுக்கு உற்பத்தியாளர்களான தொழிலாளர்கள் மற்றும் மனித உரிமை மீறல்களைக் கவனத்தில் கொள்ளாது. உலக வர்த்தக வணிகச்சின்னங்கள் போன்ற பன்னாட்டு கம்பெனிகளுக்கு மனித உரிமைகளை மதிப்பதற்கும் அவர்களது விநியோகச் சங்கிலிகள் முழுவதும் மனித உரிமைகளுக்கு உரிய கவனத்தை முற்றிலும் நடைமுறைப்படுத்துவதற்குமான முழுப் பொறுப்பைக்கொண்டுள்ளன. தங்களது செயற்பாடுகளுடன் அல்லது அவர்களது விநியோகஸ்தர்களின் செயற்பாடுகளுடன் நேரடியாகத் தொடர்புடையபாதகமான மனித உரிமை மீறல்களை நேரடியாகப் பாதுகாக்க இயலாவிடிலும் இனங்கண்டு தடுத்து கட்டுப்படுத்தி பரிகாரம் அளிக்க உலக வர்த்தக சின்னங்களுக்கு கடமையுண்டு.

ஆசியாவில்[1] உள்ள ஏனைய நாடுகளில் FIDH ஆல் இனங்கண்டவாறு உலக வர்த்தக சின்னங்களின் கொள்முதல் நடைமுறைகள் பணித்தளங்களில் சாதகமான நேரடி விளைவுகளை ஏற்படுத்தும். கொள்முதலில் ஏற்படும் அட்டவணை மாற்றம் அழுத்தமான உற்பத்தி திட்டம் மற்றும் விலை குறைப்பு போன்ற அழுத்தங்கள் தொழிலாளர் உரிமை மீறல்களுக்கு பங்களித்து வேலை நிலைமைகள் மீது நேரடியான எதிர்விளைவுகளை விநியோகச்சங்கிலிகள் ஏற்படுத்தும். விநியோகச் சங்கிலியின் வெளிப்படைத் தன்மையின்மை ஆடைத் தொழிற்சாலைகளில் மனித உரிமைகளை நிலை நாட்டலை மேலும் தடை செய்கின்றன. உலக வர்த்தக சின்னங்களின் பொருளாதாரச் செல்வாக்கு மற்றும் உற்பத்தியாளர்கள் மீது அவர்கள் கொண்டுள்ள முக்கியமான செல்வாக்கு என்பவற்றை பயன்படுத்தி இந்தியாவில் ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் தொழிலாளர்கள் உரிமைகளை கோருவதற்கும் ஏற்ற சூழல் உருவாக உலக வர்த்தக வணிகச்சின்னங்கள் முக்கிய பங்கு ஆற்ற வேண்டும்

## <u>பரிந்துரைகள்</u>

---

[1] சீனாவின் தொழிலாளர்கள் மாற்றம் கோருவதைப் பார்க்கவும். வர்த்தக சின்னங்கள் என்ன பங்கை செயலாற்றவேண்டும்? FIDH மற்றும் CLB மே 2013 மற்றும் பங்களாதேஷ் வியோகச் சங்கிலியில் தொழிலாளர் உரிமைகளும் மற்றும் கூட்டாண்மை சமூகப் பொறுப்பும். FIDH ஜூன் 2008.

**இந்திய அரசிற்கு:**

- சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் (ILO) உடன்படிக்கை எண் 87 ல் குறிப் பிட்டுள்ள சங்கம் சேர்வதற்கான சுதந்திரம் மற்றும் ஒருங்கிணைப்பதற்கான உரிமை பாதுகாப்பு எண் 98 ல் குறிப்பிட்டுள்ள ஒருங்கிணைவதற்கான உரிமை மற்றும் கூட்டு பேர உரிமை, எண் 181 ல் குறிப் பிட்டுள்ள தனியார் வேலை வாய்ப்பு முகவர்கள் குறித்தவை, எண் 29 ல் குறிப்பிட்டுள்ள கட்டாய வேலை, வீட்டு வேலை குறித்த பிரிவு 177 மற்றும் கட்டாய வேலை ஒழிப்பு குறித்த பிரிவு 105 ஐ ஏற்றுக்கொண்டு செல்லத்தக்கதாக்க வேண்டும் .

- சிறுவர் உரிமை பிரகடனப் பிரிவு 32 ஐ ஏற்கும் நிலையை மறு பரிசீலனை செய்து பின்வலிக்க வேண்டும்.

- பொருளாதார சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கையின் விருப்ப நெறிமுறையை (Optional Protocol) ஏற்று அங்கீகரிக்க வேண்டும்

- சர்வதேச தொழிலாளர் மற்றும் மனித உரிமைகள் சட்டங்களுடன் ஒத்துப்போகும் பின்வருவனவற்றை உறுதிப்படுதி தேசிய சட்டங்களை திருத்துதல்

    - முறைசார் மற்றும் முறைசாராத் துறைகள் ஆகிய இரண்டிலும் அனைத்து தொழிலாளர்களும் ஒருங்கிணைவதற்கான கூட்டுபேரம் பேசுவதற்கான மற்றும் வேலை நிறுத்தம் செய்வதற்கான உரிமைகள் மீதான சட்ட மற்றும் நடைமுறை ரீதியான கட்டுப்பாடுகளை நீக்குதல்

    - ஏற்படக்கூடிய சுரண்டலைத் தவிர்ப்பதற்கு பயிலுனர் காலத்திற்கான உச்ச காலவரையறையை தற்போதைய 3 வருடத்திலிருந்து குறைத்தல்

- தகுந்த அரசியல் நிதி மற்றும் மனித வளங்களின் ஒதுக்கீடுகள் மூலமாக உள்ஊர் மற்றும் மாவட்ட மட்டங்களில் தொழிலாளர் ஆய்வை மீண்டும் அமல்படுத்தி குறிப்பாக தொழிலாளர் ஆய்வாளர்களின் ஊழல் மீது கவனம் செலுத்தி தடுக்கவேண்டும்

- குற்றவிலக்களிப்புக்கு முடிவு கட்டும் வகையில் தொழிலாளர் உரிமை மீறல்களில் வெளிப்படையான, நடுநிலை தவறாத காலதாமதமற்ற மற்றும் பாரபட்சமற்ற புலன் விசாரணைகள் திட்டமான முறையில் நடத்தப்படுவதை

உறுதிசெய்தல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரங்களுக்கான வழிமுறைகளை உத்தரவாதப்படுத்த வேண்டும்.

- துண்டொன்றுக்கு (piece rate) என்ற ஒரு குறைந்தபட்ச கணக்கு முறைகள் உபயோகிப்பதைத் தவிர்த்து அதிக வேலை நேரம் இல்லாத பெருமளவிலான தொழிலாளர்கள் உற்பத்தி செய்வதற்கு இயன்ற அளவுடனான இலக்குகள் அமையும் வகையில் கணக்கு முறைகள் நிர்ணயிக்கப்படுவதை உறுதி செய்தல்

- முறைசாரா அமைப்புகளும் அங்கீகாரம் பெறும்வகையில் கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் தொழிலாளர்கள் பாதுகாப்பு உரிமைகள் சங்கம் சேரும் சுதந்திரம் மற்றும் தொழிற்சங்கத்தை உருவாக்குவதற்கான உரிமை உட்பட, தரமான வாழ்வுரிமையை (வாழ்வூதியம் உட்பட) உள்ளடக்கிய உரிமைகளை உறுதி செய்தல்.

- பேச்சுவார்த்தை வாழியாகவும் உற்பத்தியாளர்கள் மற்றும் உலக வர்த்தகசின்னங்கள், அரசுசாரா அமைப்புகள் மற்றும் நிலுவையிலுள்ள தொழிற்சங்கங்களுடனான சுமுக இணைக்கத்துடன் ஆலைத் தொழிலாளர்களை அமைப்பாக்குவதற்கு ஆவன செய்தல்.

- தொழிற்சங்க உறுப்பினர்கள் மற்றும் தொழிலாளர் செயற்பாட்டாளர்களின் மீதான தாக்குதல்கள் மற்றும் தொல்லைப்படுத்தல்களில் வெளிப்படையான தாமதமற்ற மற்றும் பாரபட்சமற்ற புலன்விசாரணையை உறுதிப்படுத்துதல்.

- சுமங்கலித்திட்டம் மற்றும் ஆலைத்தொழிற்சாலையின் இதர மனித உரிமை மீறல்களை விசாரிக்கும் வகையில் வலுவான பல்வேறு நபர்களை உள்ளடக்கிய மற்றும் வணிக முயற்சிகளை ஊக்கப்படுத்துதல்.

- வேலை வாய்ப்புகள் குறைவான, வறுமை அதிகமான, முன்னேற்றமடையாத பின்தங்கிய கிராம மக்களுக்கு வாய்ப்பு வழங்கும் வகையில் கிராம வளர்ச்சித் திட்டங்களை ஊக்குவித்து இடம் பெயர் தொழிலாளர்களின் மனித உரிமை மீறலை தடுத்தல்.

**இந்தியாவிலுள்ள ஆடை உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு**

- சிறுவர் தொழிலாளர், பயிலுனர்கள், வேலை நேரங்கள் மற்றும் பாகுபாடு தொடர்பான சட்டத் தேவைகளுக்கு மதிப்பளித்தல்.

- சிறப்பு கவனம் வாயிலாக விநியோகஸ்தர்கள் மற்றும் ஏனைய வர்த்தகப் பங்குதாரர்களால் நடைமுறைப்படுத்தப்படும் சுமங்கலி மற்றும் அதைப் போன்ற திட்டங்களின்ஆபத்தை மதிப்பீடு செய்ய கவனிக்கவேண்டியவை :
    - தங்குமிடங்கள் அல்லது விடுதிகள் இருக்கின்ற நிலை, தரகர்கள் அடிப்படையிலான ஆட்சேர்ப்பு முறைகள் மற்றும் மொத்தமாக சம்பளம் வழங்குதல் என்ற முறை.
    - தொழிற்சங்கங்கள் இல்லாத நிலை
    - ஊதியப்பிடித்தத்தை குறிப்பிடும் வங்கிக் கணக்கு புத்தகங்கள்
    - தொழிலாளர்கள் குழுக்களுக்கு சுதந்திரமான மற்றும் சனநாயக முறையிலான தேர்தல்கள் இல்லாமை மற்றும்

ஏனையவற்றோடு சுதந்திரமான நடமாட்டம் மீதான கட்டுப்பாடு

- தொழிலாளர்களை அடிமைப்படுத்தும் தன்மை கொண்டவையாக கருதப்படக்கூடிய சுமங்கலி மற்றும் அதைப்போன்ற வேலை வாய்ப்புத்திட்டங்கள் கடைபிடிப்பதாக சந்தேகிக்கப்படும் நிறுவனங்களுடன் வர்த்தக ரீதியான தொடர்புகளை தவிர்த்தல்
- 'மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தலை உறுதிப் படுத்துதல்' வர்த்தக தொடர்புகளுக்கு ஒரு முன் நிபந்தனை என்பதை நூற்பாலைகள் போன்ற விநியோகஸ்தர்களிடம் வலியுறுத்துதல்
- ஆடைத் தொழிற்சாலைகளுக்கு தொழிற் சங்கங்கள் அமைப்பதற்கு அனுமதித்தலும் மற்றும் வசதியளித்தலும்
- தொழிற்சாலை அளவில் திறமையான பரிகார அமைப்புகள் அமைந்திட உறுதிப் படுத்துதல்
- தொழிலாளர்கள் சபைகள் சனநாயக முறையில் தெரிவு செய்யப்படுவதை உறுதி செய்தல் மற்றும் பழி வாங்கப்படலாம் என்ற அச்சமின்றி அக்கறையான பிரச்சினைகளை எழுப்பக்கூடிய பொருத்தமான அரங்குகள் என்பதை உறுதி செய்தல்
- நேர்மையான வகையில் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடல் மற்றும் கூட்டு பேரம் பேச இயலும் வகையில் தொழிலாளர் பிரதிநிதிகள் தேர்தலை அனுமதித்தல்

- தொழிலாளர்களும் அவர்கள் குடும்பங்களுக்கும் தரமான வாழ்நிலையை உறுதிசெய்யத் தேவையான வாழ்வூதியத்தை வழங்குதல்

- சமூக தணிக்கையில் நம்பிக்கை வைத்து முழுமையான மற்றும் அதிகாரமுள்ள ஆவணங்களை வழங்குதல் மற்றும் தொழிலாளர் நேர்காணல்களில் தலையீடு செய்யாதிருத்தல்

- வேலைத் தளங்கள் மற்றும் விடுதிகள் என்பவற்றில் அனைத்து வகையான பாகுபாடுகளையும் களைவதற்கான நடவடிக்கைகளை அமல்படுத்துதல்

**இந்தியாவில் உலக வர்த்தக சின்னங்களை அங்கீகரித்து ஆதரிக்கும் மாநிலங்களுக்கு**

- உற்பத்தி இடங்கள் குறித்த தகவல்கள், ஏற்படக்கூடிய ஆபத்துகள் குறித்த விபரம் மற்றும் செயல்பாடுகளினால் ஏற்படக்கூடிய மனித உரிமை மீறல்கள் உட்பட உற்பத்தி இடங்களின் வடிவமைப்பு நிறுவன கட்டமைப்பு மற்றும் விநியோக சங்கிலி தொடர் குறித்த தகவல்களை, ஆடை நிறுவனங்கள் கண்டிப்பாக வெளிப்படுத்த வேண்டும்மென்று சட்டங்கள் இயற்ற வேண்டும்[2]

- தங்களது அதிகாரவரம்பின் கீழ் வரும் பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் அவற்றின் விநியோகச் சங்கிலி முழுவதிலும் மனித உரிமைகளை உரிய கவனத்துடன் மேற்கொள்வதற்கு தேவைப்படும் சட்டத்தை இயற்றி செயல்படுத்துதல்

- தங்களது புவி எல்லைக்குள் மற்றும்/அல்லது தங்களது அதிகார வரம்பின் கீழ் தலைமையகத்தைக் கொண்டுள்ள வர்த்தக சின்னங்களுடன் தொடர்புடைய தொழில் மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் நாட்டின் நீதிமன்றங்களின் முன் நீதிமுறைப் பரிகாரங்களுக்கு வழிமுறைகளைக் கொண்டிருக்க முடியுமென்பதை உறுதிப் படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

---

[2] பெரும் நிறுவனங்கள் தங்களது வருடாந்திர நிறுவன அறிக்கைகளில் சமூக, சுற்றுசூழல் மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் குறித்த அறிக்கையை தெரியப்படுத்த வலியுறுத்தி ஐரோப்பிய பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அண்மைய சட்ட சீர் திருத்தம் போன்றவற்றிலிருந்து சாதகமானவற்றை எடுத்துக்கொள்ளல்

- இந்தியாவுடனான இருதரப்பு உறவுகளில் சுமங்கலி மற்றும் கண்ணியமற்ற வேலை நிலைமைகள் தொடர்பான விபரங்களை இந்திய அரசாங்கத்திற்கு முன்வைத்தல்

- ஏதேனும் வகையிலான உதவி அல்லது ஒத்துழைப்புகளை இந்தியாவுக்கு வழங்கும்போது ஆடைத் தொழில்துறையில் சமூக மற்றும் தொழில் உரிமைகளுக்கான மதிப்பை இந்திய அரசாங்கம் உறுதிப்படுத்துவதை வலியுறுத்துதல்

**இந்தியாவில் வியாபாரம் செய்யவும் சர்வதேச வர்த்தக சின்னங்கள் மற்றறும் சில்லறை வர்த்தகங்களுக்கு**

உலக வர்த்தக சின்னங்களும் மற்றும் சில்லறை வர்த்தகர்களும் தங்களது விநியோகச் சங்கிலி முழுவதும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதற்கான தங்களது பொறுப்புகளை நிலைநிறுத்த வேண்டும் என்பதோடு பாதகமான மனித உரிமைகளை இனங் காணுதல், தடுத்தல் மற்றும் மட்டுப் படுத்துவதற்கு உரிய கவனத்தை மேற்கொள்ளுவதற்கு உலக வர்த்தக சின்னங்கள் பின் வருவனவற்றை மேற்கொள்ள வேண்டும்:

- தங்களது விநியோகச் சங்கிலி முழுவதும் உண்மையான மனித உரிமை பாதிப்பை அடையாளம் காணும் வகையிலும் உள்ளூர் பிரச்சினை மற்றும் சமூக நிலை குறித்த விரிவான மனித உரிமை மீறல் மதிப்பீட்டை மேற்கொள்ளுதல்

- விநியோகத்தொழிற்சாலைகளில் தொழிலாளர் உரிமைகள் மற்றும் மனித உரிமை மீறல்களை கண்டுபிடிப்பதற்கான சமூக ஆய்வுகளை அனுமதிப்பதை உறுதி செய்தல்

- நூற்பாலைகள் போன்ற கீழடுக்கு விநியோகஸ்தர்களுக்கு மதிப்பீட்டு மற்றும் ஆய்வையும் விரிவுபடுத்துதல்

- இந்தியாவில் தங்களது விநியோகஸ்தர்களின் முழுமையான பட்டியலை வெளியிடுதல் மற்றும் உற்பத்திச் சங்கிலி முழுவதிலும் மனித உரிமை மீறல்களை கண்டறிய மற்றும் சமூக இணைக்கப்பாட்டை மேம்படுத்தும் வகையில் விநியோகஸ்தர்களுடன் உறுதியான மற்றும் நீண்ட கால உறவுகளுக்கு ஆதரவளித்தல் மற்றும் ஒருங்கிணைந்த விநியோகஸ்தர்களுக்கு சிறப்புச் சலுகையளித்தல்

- மனித உரிமை மீறல்களை தடுப்பதற்கு மற்றும் கட்டுப்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இந்திய உற்பத்தியாளர்கள் ஆடைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் அதிகாரிகளுடன் செல்வாக்கினை உருவாக்குதல்

- சமூக ஆய்வு நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் முக்கியமான ஒரு வலுவான ஒருங்கிணைந்த மற்றும் அர்த்தமுள்ள வகையிலுமான கவனம் செலுத்துவதற்கு அவர்களது செல்வாக்கை அதிகரிப்பதற்கு இந்தியாவில் உலக வர்த்தக சின்னங்களிடையே ஒத்துழைப்பு மற்றும் உறுதியான முயற்சிகளை அதிகரித்தல்

- சுமங்கலித்திட்டதை ஒழிப்பதற்கும் விநியோகத் தொடர்களில் இதர வகை கட்டாய தொழிலை ஒழிப்பதற்கும் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள தொதழிற்சங்கங்கள் சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் இந்தியாவில் செயல்படும் வர்த்தக சின்னங்களை உள்ளடக்கிய ஒரு சர்வதேச ஒப்பந்தத்தை உருவாக்கும் முயற்சியில் பங்களாதேசிய மற்றும் பாதுகாப்பு ஒப்பந்த முன்மாதிரியை பின்பற்றுதல்

**சுமங்கலி திட்டம் மற்றும் அதைப்போன்ற வேலை வாய்ப்புத் திட்டங்கள் குறித்து**

கீழ் குறிப்பிடுபவை மீது குறிப்பிட்ட கவனத்தைச் செலுத்துவதன் மூலம் விநியோகஸ்தர்கள் மற்றும் ஏனைய வர்த்தக பங்குதாரர்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சுமங்கலி மற்றும் அதைப் போன்ற திட்டங்களின் நிலைகளை மதிப்பீடு செய்தல்

- தங்குமிடங்கள் அல்லது விடுதிகள் மற்றும் தரகர் அடிப்படையிலான ஆட்சேர்ப்பு முறைகள் மற்றும் மொத்ததொகை கொடுப்பதாக வாக்குறுதி கொடுக்கும் நிலை குறித்து

- தொழிற் சங்கங்கள் இல்லாமை

- ஊதியப் பிடித்தத்தை சுட்டிக்காட்டும் வங்கிக்கணக்குகள்

- தொழிலாளர் சபைகளுக்கு சுதந்திரமான மற்றும் சனநாயக முறையிலான தேர்தல்களின்மை மற்றும் ஏனையவற்றோடு சுதந்திரமான நடமாட்டங்கள் மீதான கட்டுப்பாடுகள்

- சுமங்கலி மற்றும் அதைப் போன்ற திட்டங்கள் கடைபிடிக்கப்படுவதாக சந்தேகிக்கப்படும் வியாபாரங்களுடன் வர்த்தக உறவுகளில் ஈடுபடவதிலிருந்து விலகியிருத்தல்
- சுமங்கலி திட்ட அமல்படுத்தும் நூற்பாலைகளை கண்டறிதல்

<u>வர்த்தகம் மற்றும் மனித உரிமைகள் ஐக்கிய நாடுகள் செயற்குழுவுக்கு</u>

வியாபாரம் மற்றும் மனித உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகள் வழிகாட்டல் கோட்பாடுகளுக்கு அவர்கள் மதிப்பளிக்கும் வகையில் அமல்படுத்தப்பட வேண்டிய சட்ட நிர்வாக மற்றும் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக நாடுகளின் பொறுப்புகளைத் தெளிவுபடுத்துதல் மற்றும் பரிந்துரைகளை மேற்கொள்ளுதல் குறிப்பாக குற்றவிலக்களித்தலுக்கு ஒரு முடிவு கட்டுவதற்கும் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் பயனடைய நீதி சார்ந்த மற்றும் நீதி சாராத பரிகாரங்கள் உள்ளதை உறுதிப்படுத்துவதற்கும் பரிந்துரைகளை மேற்கொள்ளுதல்

கீழ்க்குறிப்பிடுபவற்றையும் உள்ளடக்கியதான உலக வர்த்தக சின்னங்களின் பொறுப்புகளை தெளிவுபடுத்துதல்

- வர்த்தக சின்னங்களின் வாங்கும் நடைமுறைகள் உள்ளடங்கிய விநியோகச் சங்கிலியின் உண்மை நிலையின் பின்னணியில் மனித உரிமை நோக்க செயல்பாட்டில் உரிய கவனம்
- உற்பத்தியின் முழுமையான கட்டுப்பாட்டை உறுதி செய்ய விநியோகச் சங்கிலிகளைக் கண்டறிவதற்கான மற்றும் கட்டுப்பாடற்ற ஒப்பந்த சேவையை கட்டுப்படுத்தும் கடமை
- வெளிப்படையான கடமைகள்
- வர்த்தக சின்னங்களின் மற்றும் தொழிலாளர்களின் ஒருவருக்கெதிரான கடமைகள்
- நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்களிக்கும் பாதகமான விளைவுகளுக்கு உகந்த நிலையான மாற்றுச் செயல் முறைகள்

உலக விநியோகச் சங்கிலியில் ஆடைத் தொழிலாளர்களின் உரிமை மீறல்களுக்கு வர்த்தக சின்னங்களின் பங்களிப்பை தடுப்பதற்கும் விலகியிருப்பதற்கும் அவைகளின் தாய் நாடுகளுக்கு பரிந்துரைகளை மேற்கொள்ளுதல்.